# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.102/2018

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 12 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.T.இந்திரஜித், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 12.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாலசுப்ரமணியன் (PW –3) | வயது | : | 61/2026 |
| க/த பெயர் | : | திரு. வேலாயுதம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பரவாக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வராமல் வாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு நான் எந்த வகையில் உறவினர் என்றால் உறவினர் இல்லை, நண்பர். நான் வாதியின் சின்ன மாமனாரின் மாப்பிள்ளை என்றால் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். யாருடைய பாதைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருடைய குடும்ப சொத்தில் உள்ள பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.
2) பாதை உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.669/3A. தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் மதியழகன் சாகுபடி செய்து வருகிறார். அந்த பகுதியில் வாதி இளங்கோவன் வீடு உள்ளதா என்றால் சர்வே எண்.669/3B இன் மேல்புறம் வீடு உள்ளது. எந்த சர்வே எண்ணிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.669/3A இல் செல்வதற்கு பாதை கேட்கிறார், சர்வே எண் தெரியாது. வாதியின் வீட்டிலிருந்து யார் யார் நிலம் உள்ளது என்றால் வாதி வீட்டிற்கு கீழ்புறம் மதியழகன் நிலமும் அதனை அடுத்து போர்செட், அதனை அடுத்து மதியழகன் நிலமும் உள்ளது.
3) தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை, தூரத்தில் உள்ளது. தாவா சொத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தள்ளி எனது வீடு உள்ளது என்றால் இல்லை, ½ கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனக்கு

விவசாய நிலம் இல்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சர்வே எண்.669/3A வில் பாதை உள்ளதில் மதியழகன் சாகுபடி செய்து வருவதாக சொல்லியுள்ளதால் எந்த பகுதியிலிருந்து பாதை வருகிறது என்றால் பஞ்சாயத்து பாதை வழியாக வருகிறது.

4) இளங்கோவன் வீட்டிற்கு மேல்புறம் எத்தனை வீடு உள்ளது என்றால் 4 வீடு உள்ளது. அந்த 4 வீட்டின் உரிமையாளர் யார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த 4 வீட்டிற்கு அடுத்து கீழ்புறம் வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். மெயின்ரோட்டிலிருந்து அந்த 4 வீட்டை தாண்டி தான் வாதி அவரது வீட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். அந்த பாதையைதான் பொதுப்பாதை என்று வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பொதுப்பாதை இல்லை. பொதுப்பாதை என்று எந்த சொத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது அண்ணன் தம்பிகளின் சொத்தில் பாதை இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5) தாவா சொத்தை எப்போது நான் கடைசியாக பார்த்தேன் என்றால் இரண்டு நாட்கள் முன்பு வாதி அழைத்து சென்றபோது பார்த்தேன். வழக்கு எதற்காக வாதி தாக்கல் செய்தார் என்ற விபரம் தெரியாமல் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:07:29 +0530

District Munsif
Mannargudi.